TNTS090014702020

மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21– ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**C.C.No.844/2020**

அரசுக்காக: காவல் உதவி ஆய்வாளர்,

சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையம்

(சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.245/2017)

……… குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

பொன்பாக்கியராஜ் (எ) பாக்கியமுத்து, வயது, 34/2017,

த/பெ. செல்வராஜ்,

10, மெயின்ரோடு, ஜெ.டி.நகர்.

……. எதிரி

| | | |
|---|---|---|
| **1.** | Case Number | CC No. 844/2020 |
| **2.** | Name of the Police Station and Crime Number | Sankarankovil Taluk Police Station<br>Crime No.245/2017 |
| **3.** | Name of the Accused | Ponpackiyaraj @ Packiyamuthu |
| **4.** | Date of Occurrence | 21.10.2017 |
| **5.** | Date of surrender | -- |
| **6.** | Date of Arrest | 24.10.2017 |
| **7.** | Period of remand | 15 days |
| **8.** | Date of release on bail | 07.11.2017 |
| **9.** | Date of filing final report | 27.11.2020 |
| **10.** | Date of Commencement of trial | 21.05.2026 |

| | | | |
|---|---|---|---|
| **11.** | Date of Chief examination | PW1 | 21.05.2026 |
| | | PW2 | 21.05.2026 |
| | | PW3 | 04.06.2026 |
| | | PW4 | 24.06.2026 |
| | | PW5 | 24.06.2026 |
| | | PW6 | 24.06.2026 |
| | | PW7 | 24.06.2026 |
| | | PW8 | 29.06.2026 |
| | | PW9 | 06.07.2026 |
| **12.** | Date of Cross examination | PW1 | 21.05.2026 |
| | | PW2 | 21.05.2026 |
| | | PW3 | 04.06.2026 |
| | | PW4 | 24.06.2026 |
| | | PW5 | 24.06.2026 |
| | | PW6 | 24.06.2026 |
| | | PW7 | 24.06.2026 |
| | | PW8 | 29.06.2026 |
| | | PW9 | 06.07.2026 |
| **13.** | Date of Conclusion of trial | 16.07.2026 | |
| **14.** | Plea of the accused | Not guilty | |
| **15.** | Finding of the Court | The accused is found not guilty for the offences u/s.457, 380 r/w 511 of IPC and therefore the accused is acquitted under Section 248(1) Cr.P.C. | |

கடந்த 27.11.2020 தேதியன்று இந்நீதிமன்றத்தின் ஆண்டுப்பட்டிகை எண். 844/2020 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசுக்காக குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை –1 திரு.R.மகிழ்வண்ணன், B.Com.,B.L., (பொறுப்பு) அவர்களும், எதிரிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. கருப்பசாமி, B.A.,B.L., ஆகியோர்கள் ஆஜராகியும்

இவ்வழக்கானது 21.07.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வரப்பெற்று ஆவணங்களை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கும் ...

**தீ ர் ப் பு ரை**

இவ்வழக்கானது சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையத்தார் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 457, 380, 511–ன் கீழ் குற்ற எண். 245/2017–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றம் கவனமுடன் பரிசீலனை செய்து போதுமான காரணம் எதிரி மீது குற்றம் விசாரிக்கத்தக்க முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் திருப்தி அடைந்து பின் கு.வி.மு.ச. பிரிவு 190 (1) (b)–ன் கீழ் இவ்வழக்கு நீதிமன்றம் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

1.1 கடந்த 21.10.2017–ம் தேதி 01.00 மணிக்கு நகரம் கிராமத்தில் அமைந்துள்ள இந்தியா 1 ATM சென்டரில் எதிரி TN 79 A 1576 Honda Dream என்ற இருசக்கர வாகனத்தில் வந்து முகத்தை கர்ச்சீப்பால் மறைத்து தொப்பி அணிந்து பதுங்கி உள்ளே சென்று சட்டரை இறக்கி வைத்துவிட்டு, சுத்தியல், கட்டிங்பிளேயர், கட்டர், டெஸ்டர் ஆகிய ஆயுதங்களை வைத்து ATM மிஷினை உடைத்து கன்னக் களவு முயற்சி செய்ததாக தெரிவிக்கப்பட்டு, 1, 2 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 457, 380 உ/இ 511–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் வழங்கி, குற்றம் குறித்து வினவிய விபரம் ;–**

2.1 இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 204–ன்படி அழைப்பணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, போதிய காலஅவகாசம் அளித்து, இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்தவகையில் கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் கீழ் எதிரி மீது கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டன.

1) கடந்த 21.10.2017–ம் தேதி 01.00 மணிக்கு நகரம் கிராமத்தில் அமைந்துள்ள இந்தியா 1 ATM சென்டரில் எதிரி TN 79 A 1576 Honda Dream என்ற இருசக்கர வாகனத்தில் வந்து முகத்தை கர்ச்சீப்பால் மறைத்து தொப்பி அணிந்து பதுங்கி உள்ளே சென்று சட்டரை இறக்கி வைத்துவிட்டு, சுத்தியல், கட்டிங்பிளேயர், கட்டர், டெஸ்டர்

ஆகிய ஆயுதங்களை வைத்து ATM மிஷினை உடைத்து கன்னக் களவு முயற்சி செய்ததாக குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 457, 380, 511–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

3. மேற்படி வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிரிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்கிறீர்களா ? அல்லது விசாரணையை வேண்டுகிறீர்களா? என்று வினவப்பட்டது. அப்போது எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள்.

4. இதற்குப்பின் அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர்படுத்த உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில், அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருள்களாக சா.பொ.1 முதல் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின், அவர்களது சாட்சியத்தில் எதிரிக்கு எதிரான சங்கதிகள் பற்றி நேரடியாக விளக்கம் பெறுவதற்காக கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் கேள்விகள் கேட்டபோது எதிரி பொய் என்று மறுத்தார்.

## 6. <u>**தீர்மானிக்கப்பட வேண்டி பிரச்சனைகள் :–**</u>

1) எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளனரா?

2) எதிரி குற்றவாளிகள் எனில், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?

**7. <u>நிரூபண சுமை :–</u>**

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101–ன் படி(BSA– 104) அரசு தரப்பில்தான் எதிரிகள் குற்றத்தை செய்தார்கள் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டிய சுமையானது (Burden of proof) அரசு தரப்பை சார்ந்ததாகும்.

8. <u>அரசு தரப்பு சாட்சியங்களும், பரிசீலனையும் :–</u>

8.1 இந்த வழக்கில் எதிரி மீது இது முதலாவது குற்றச்சாட்டு என்பதும், கடந்த 21.10.2017–ம் தேதி 01.00 மணிக்கு நகரம் கிராமத்தில் அமைந்துள்ள இந்தியா 1 ATM சென்டரில் எதிரி TN 79 A 1576 Honda Dream என்ற இருசக்கர வாகனத்தில் வந்து

முகத்தை கர்ச்சீப்பால் மறைத்து தொப்பி அணிந்து பதுங்கி உள்ளே சென்று சட்டரை இறக்கி வைத்துவிட்டு, சுத்தியல், கட்டிங்பிளேயர், கட்டர், டெஸ்டர் ஆகிய ஆயுதங்களை வைத்து ATM மிஷினை உடைத்து கன்னக் களவு முயற்சி செய்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 457, 380, 511–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

8.2 மேற்படி குற்றச்சாட்டுக்கள் இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 457 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

**பிரிவு 457 :– சிறைத்தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்யும்பொருட்டு இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதல் :–**

1) சிறைத்தண்டனைக்குரிய ஒரு குற்றம் எதையும் செய்வதன்பொருட்டு, இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதலை அல்லது இரவில்கன்னமிடுதலைச் செய்கிற ஒருவர், ஐந்தாண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார். மற்றும் அவரை அபராதத்திற்கும் உட்படுத்தலாம். செய்ய உட்கருத்துக் கொள்ளப்பட்ட குற்றம் திருட்டுக் குற்றமாக இருக்குமானால், பதினான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்.

(2) வழிபாட்டு இடமாகப் பயன்படுத்தப்படும் கட்டிடம் எதிலும் சிலை அல்லது தெய்வச்சிலையைத் திருடும் குற்றத்தைச் செய்கின்ற வகையில் இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதலை அல்லது இரவில் கன்னமிடுதலைச் செய்கிற ஒருவர் உட்பிரிவு (f)–இல் யாது கண்டிருந்தபோதிலும், மூன்றாண்டுகளுக்குக் குறையாமல் பதினான்கு ஆண்டுகள் வரையிலும் கடுஞ்சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார். மற்றும் ஐந்தாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் அபராதத்திற்கும் உட்படுத்தப்படுவார்.

**வரம்புரையாக :–**

சிறப்புக் காரணங்களின்பேரில் நீதிமன்றம் மூன்றாண்டுகளுக்குக் குறைவாகவும் சிறைத்தண்டனை வழங்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

8.3 <u>பிரிவு 380:– குடியிருக்கிற வீடு முதலியவற்றில் திருட்டு</u> –

1) எந்தக் கட்டிடம், கூடாரம் அல்லது கப்பல் மக்கள் குடியிருப்பாக, அல்லது சொத்தின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படுகிறதோ அந்தக் கட்டிடம், கூடாரம் அல்லது கப்பல் எதிலும் திருட்டைச்செய்கிற ஒருவர் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம்.

**8.4 <u>பிரிவு 511 :– ஆயுள் தண்டனை அலலது மற்றச் சிறைத்தண்டனை விதிப்பதற்குரிய குற்றங்களைச் செய்ய முயற்சி செய்தலுக்கான தண்டனை</u> –**

இந்தச் சட்டத்தின்படி ஆயுள் தண்டனை அல்லது வேறு சிறைத்தண்டனை விதிப்பதற்குரிய ஒரு குற்றத்தைச் செய்கிற ஒருவர் அந்த முயற்சிக்கு தண்டனையாக, இந்தச் சட்டத்தில் வெளிப்படையாக வகை செய்யப்படாமலிருக்குமிடத்து, நிலவரத்திற்கேற்ப, ஆயுள் சிறைத்தண்டனையில் ஒரு பாதி வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குத் தண்டனையோ அல்லது அந்தக் குற்றத்திற்கு வகை செய்யப்பட்டிருக்கும் சிறைத்தண்டனை வகை எதிலும் எவ்வளவு அதிக கால அளவுக்குச் சிறைத்தண்டனை கொடுக்க முடியுமோ அதில் ஒரு பாதி அளவுக்குத் தண்டனையோ அல்லது அந்தக் குற்றத்திற்கு வகை செய்யப்பட்ட அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

8.5 மேற்படி அரசு தரப்பு வழக்கின்படி, அ.சா.1 வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவ இடமானது நகரம் கிராமத்தில் அமைந்துள்ள இந்தியா 1 ATM சென்டர் ஆகும். இதனை புகார் மூலம் அறியலாம். தான் BTI Payment Private Ltd என்ற நிறுவனத்தில் உள்ள India ATM பராமரிப்பு பணி அனுமதி பெற்று கடந்த ஆறு மாதங்களாக மேற்கொண்டு வருவதாகவும், நாங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மொத்தம் 46 India ATM ஐ பராமரிப்பு மேற்கொண்டு வருகிறோம், மேற்படி நிறுவனத்திற்கு சொந்தமான சங்கரன்கோவில் தாலுகா நகரம் கிராமத்தில் அமைந்துள்ள India ATM ல் அடையாளம் தெரியாத நபர் உடைத்துள்ளார். இந்த தகவலை கடையின் உரிமையாளர் துரைராஜ் இன்று காலை (21.10.2017) 07.00 மணிக்கு எனக்கு தொலைபேசி மூலம் தகவல் அளித்தார். இந்த தகவலை கோபி, BTI Payment Private Ltd Zonal Officer இடம் தெரிவித்தேன். பின் அவரின் அறிவுரைப்படி ATM ஐ சென்று பார்த்துவிட்டு காவல்

நிலையம் சென்று புகார் அளிக்கும்படி கூறினார். அதன்படி நான் ATMஐ சென்று பார்த்தேன். அதன் முன்பக்க கதவுகள் உடைக்கப்பட்டு இருந்தன. அதைபார்க்கும்போது திருட முயற்சி மேற்கொண்டது போல தெரிகின்றது. ஆகையால் ATMல் பணம் ஏதும் திருடுபோகவில்லை என்று கூறியுள்ளார். மேற்படி பிரிவு 457 உட்கூறுகள் பொருந்தவேண்டும். எதிரி 21.10.2017–ம் தேதி இரவு 07.00 மணிக்கு ATMல் அத்துமீறி உள்ளே நுழைந்து திருட வேண்டும் என்ற குற்றம் செய்வதற்காக இரவு நேரத்தில் உள்ளே சென்று திருடினார் என்பதை அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும். மேலும், மேற்படி பிரிவு 380 உட்கூறுகள் பொருந்தவேண்டும் எனில், சம்பவ இடம் கட்டிடம் அல்லது சொத்தின் பாதுகாப்பிற்காக பயன்படுத்திய கட்டிடத்தில் இருந்தது என்றும், அதில் எதிரிகள்தான் திருட்டுக் குற்றத்தை செய்தார்கள் எனவும், மேற்படி அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 21.10.2017–ம் தேதி 01.00 மணிக்கு நகரம் கிராமத்தில் அமைந்துள்ள இந்தியா 1 ATM சென்டரில் எதிரி TN 79 A 1576 Honda Dream என்ற இருசக்கர வாகனத்தில் வந்து முகத்தை கர்ச்சீப்பால் மறைத்து தொப்பி அணிந்து பதுங்கி உள்ளே சென்று சட்டரை இறக்கி வைத்துவிட்டு, சுத்தியல், கட்டிங்பிளேயர், கட்டர், டெஸ்டர் ஆகிய ஆயுதங்களை வைத்து ATM மிஷினை உடைத்து களவு முயற்சி செய்தார்கள் என்பதை அரசு தப்பு மெய்ப்பித்தால்தான் இந்த வழக்கின் எதிரிக்கு இ.த.ச. பிரிவுகள் 457, 380 உ/இ 511 இயலும். ஆனால், இந்த வழக்கானது நேரடி சாட்சியம் இல்லாத சூழ்நிலை சாட்சியத்தின் அடிப்படையிலான வழக்காகும். அதன் அடிப்படையில், இந்த வழக்கில் புகார்தாரர் தனது மனுவில் எதிரி அங்க அடையாளங்களான பெயர், விலாசம், உயரம், மாநிறம், பருமன், போன்ற அடையாளங்கள் எதுவும் குறிப்பிட்டு புகார் மனுவில் கொடுக்கப்படவில்லை. இந்த வழக்கானது முழுக்க முழுக்க சூழ்நிலை சாட்சியம் (Circumstance Evidence) வழக்காகும். அதனடிப்படையில், இந்த வழக்கில் எதிரி இந்தக் குற்றத்தை செய்தார்கள் என்பதை எதிரி இந்த வழக்கில் எதிரியாக அடையாளப்படுத்தியது காவல் துறையினர் எதிரியை கைது செய்து, அதன் அடிப்படையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே இந்த வழக்கில் எதிரி அரசு தரப்பினரால் எதிரியை உறுதி செய்துள்ளார்கள். ஆனால், சூழ்நிலை சாட்சியம் வழக்குகளில் சாட்சியமானது தொடர் சங்கிலி (Chain Link) தொடர்ச்சியாக இருக்க வேண்டும். அது அறுபட்டால் அந்த

வழக்கை சந்தேகிக்கும் என **மாண்பமை உச்ச நீதிமன்றம் In Re Sharata Shardha AIR 1984 SC 162 தீர்ப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.**

சந்தர்ப்ப சாட்சியம் தொடர்பான பஞ்ச சீலங்கள்

(a) முழுமையாகத் தரப்பட வேண்டும்.

(b) தெளிவானதாக இருக்க வேண்டும்.

(c) முடிவானதாக இருக்க வேண்டும்.

(d) குற்றம் சாட்டப்பட்டவரின் மாசற்றத் தன்மைக்கு எதிராக இருக்க வேண்டும்.

(e) சந்தர்ப்பங்கள் விடுபடாதச் சங்கிலித் தொடராக (chain theory) இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் புகார்தாரர் தனது புகார் மனுவில் 1, 2 எதிரிகளின் அங்க அடையாளம் குறிப்பிட்டு புகார் மனு கொடுக்கவில்லை.

8.6. மேலும், **இந்திய சாட்சிய சட்டம் [ BSA – 23(1) ] பிரிவு 25–ல்**

ஒரு காவல் அதிகாரியிடம் கொடுக்கப்படுகின்ற குற்ற ஏற்புரையைச் சட்டப்படி அந்த நபருக்கு எதிராகப் பயன்படுத்த முடியாது.

குற்ற ஏற்புரை (Confession) என்பதற்கு எந்தச் சட்டமும் எந்த வரையறையும் சொல்லவில்லை. ஆனால் **Sahoo –Vs– Uttar Pradesh AIR 1966 SC 40** என்ற வழக்கில் குற்ற ஏற்புரை (Confession) என்பது இப்படிச் சொல்லப்பட்டுள்ளது.

a) இஃது ஓர் ஏற்புரை

b) இது வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, அலலது மின்னணு வடிவத்திலோ இருக்கலாம்.

c) இது குற்றம் சாட்டப்பட்டவரால் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

d) இது குற்றத்தை ஒப்புக்கொள்கின்ற விதமாகவோ அல்லது ஒரு குற்றத்தின் எல்லாக் கூறுகளையும் கணிசமானஅளவுக்கு (Substantially) ஒப்புக் கொள்ளுகின்ற விதமாகவோ இருக்கும்.

இந்தச் சட்டப்பிரிவில் வருகிற காவல் அதிகாரி (Police Officer) யார் என்றால், குற்ற விசாரணை முறைச் சட்டம், 1973 – அத்தியாயம் 12–ன் கீழ், புலன் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய அதிகாரம் படைத்த காவல் அதிகாரிகளை மட்டும் தாம் குறிக்கிறது.

என்றும் கூறப்பட்டுள்ளது.

8.7. மேலும், **இந்திய சாட்சிய சட்டம் [ BSA – 23(2) ] பிரிவு 27–ல்**

சாதாரணமாக, இந்திய சாட்சியச் சட்டம், 1872– பிரிவு 25–ன் கீழ், காவல் அதிகாரியிடம் கொடுக்கப்படும் குற்ற ஏற்புரை தொடர்புடையது அன்று. அஃது, ஏற்கத்தக்கச் சாட்சியம் அன்று.

ஆனால், அதன் அடிப்படையில் புதிய பொருண்மை ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டு இருந்தால், அவ்வாறாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொருண்மைத் தொடர்பான சாட்சியம் மட்டும் ஏற்கப்படும்.

இந்திய சாட்சியச் சட்டம் 1872–ல் இஃது ஒரு தங்க முக்கோணம் (Golden Triangle) அடிப்படையில், கைது காவல்படுத்துதல், குற்ற ஏற்புரை, கண்டுபிடித்தல் அல்லது கைப்பற்றல் ஆகியவை உள்ளடங்கி இருக்க வேண்டும். சாதாரணமாக, இதில் ஒன்று இல்லையென்றால் மற்றவைக்குச் சட்ட வலிமை (Legal Value) இல்லை என்பது சட்டநிலைப்பாடாகும். (Settled Principal Law)

8.8. மேலும், **மாண்பமை உச்சநீதிமன்றம் Tulshiram Sahadu Suryawanshi and others – Vs – State of Maharashtra 2012(3) DMC 591 (SC) தீர்ப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.**

பிரிவு 27–ன் கீழ் சாட்சியத்தைப் பதிவு செய்யும் முன், அந்த வழக்கில் 6 விஷயங்கள் உள்ளனவா என்று பார்க்க வேண்டும். அவற்றை நினைவில் கொள்ள C.I.D/R.E.D. என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளலாம். இங்கே,

C என்பது Custody ( காவலில் உள்ள ஒருவர்)

I என்பது Information (அந்த நபர் தருகின்ற தகவல் அடிப்படையில்)

D என்பது Discovery (ஏதேனும் பொருண்மைக் கண்டுபிடிக்கப்பட்டால்)

R என்பது Relevancy ( அவ்வாறு கண்டுபிடித்தது வழக்குத் தொடர்புடையது எனில்)

E என்பது Evidence (இது பற்றியெல்லாம் சாட்சியத்தில் கொண்டுவரப்பட்டு இருந்தால்)

D என்பது Distinct fact (அப்படியான கண்டுபிடிப்பு மட்டுமே)

அனுமதிக்கத்தக்க சாட்சிய ஆகும் என்று கூறப்பட்டுள்ளது.

9. மேலும், **மேற்படி பிரிவுகள் 457, 380 உ/இ 511 உட்கூறுகள் பொருந்தவேண்டும் எனில், சம்பவ இடம் கட்டிடம் அல்லது சொத்தின் பாதுகாப்பிற்காக பயன்படுத்திய கட்டிடத்தில் இருந்தது என்றும், அதில் எதிரிகள்தான் திருட்டுக் குற்றத்தை செய்ய முயற்சி செய்தார் என புகார்தாரர் குறிப்பிட்டு எதிரிகளின் அங்க அடையாளங்களான உயரம், நிறம், உடை ஆகியவற்றைக் குறிப்பிட்டு புகாரில் கூறியிருக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து புலனாய்வு அதிகாரி எதிரிகளை அடையாளம் காணும் வகையில் அடையாள அணிவகுப்பு (Test Idendification Parade) நடத்தி, அதன் அடிப்படையில் எதிரிகளை அடையாளம் காட்டியிருக்க வேண்டும். ஆனால், இந்த வழக்கில் எதிரிகளை அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டுமே இந்த வழக்கில் எதிரிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.**

10. மேலும், இந்த வழக்கானது நேரடி சாட்சி வழக்கு கிடையாது. இந்த வழக்கு முழுக்க முழுக்க சூழ்நிலை சாட்சியம் வழக்கு ஆகும். அதன் அடிப்படையில், இந்த வழக்கில் எதிரி இந்தக் குற்றத்தில் ஈடுபட்டார் என்பதை எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார். ஆனால் இந்த அரசு தரப்பு வழக்கில் எதிரியின் கைது முதலில் மெய்ப்பிக்க வேண்டும். அதன்பிறகு எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார் என்பதை மெய்ப்பிக்க வேண்டும். அதன்பிறகு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பொருட்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றியதை மெய்ப்பிக்க வேண்டும். ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பு ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளும், அத்தாட்சி கைப்பற்றப்பட்ட சாட்சிகளும் மேற்படி அரசு தரப்பை மெய்ப்பிக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதை அறியலாம்.

11. மேலும், சம்பவத்தைக் கேள்விப்பட்டு, புகார் மனு கொடுத்த சாட்சியான அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " எதிரியை தெரியும் என்றும், தான் இந்தியா ஒன் என்ற ATM கம்பெனியில் திருநெல்வேலி மற்றும் தூத்துகுடி மாவட்ட பராமரிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து வருவதாகவும், நகரத்தில் உள்ள ATM உடைக்கப்பட்டிருந்ததாக தன்னிடம் போலீசார் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், அந்தக் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தைக்

கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "நகரத்தில் உள்ள தன்னுடைய கட்டிடத்தில் தான் இந்தியன் ATM இருந்தது என்றும், அந்த ATM உடைக்கப்பட்டிருந்ததாக தன்னிடம் போலீசார் தகவல் சொன்னார்கள் என்றும், தான் அ.சா.1 ற்கு போன் செய்து தகவல் சொன்னதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தைக் கேள்விப்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.3 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில, "தனது சொந்த ஊர் திருச்செந்தூர் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஒப்புதல் மற்றும் அத்தாட்சி சாட்சியான அ.சா.4 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், "எதிரியை தெரியாது என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1–வது கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், அத்தாட்சியில் காண்பிக்கப்படும் 1–வது கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு ஒப்புதல் மற்றும் அத்தாட்சி சாட்சியான அ.சா.5 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், "எதிரியை தெரியாது என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2–வது கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், அத்தாட்சியில் காண்பிக்கப்படும் 2–வது கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகஜர் சாட்சியான அ.சா.6 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "தன்னிடம் காட்டப்படும பார்வை மகஜரில் உள்ள 1–வது கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "தன்னிடம் காட்டப்படும பார்வை மகஜரில் உள்ள 2–வது கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும்,

மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில் அ.சா.1 முதல் அ.சா.7–ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1 முதல் அ.சா.4–ன் சாட்சியம் நம்பும்படியும், சாட்சியத்திற்கு ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) என இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

12. எனவே, இந்த அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கும் வகையில் உள்ளது. ஆதலால் கடந்த 21.10.2017–ம் தேதி 01.00 மணிக்கு நகரம் கிராமத்தில் அமைந்துள்ள இந்தியா 1 ATM சென்டரில் எதிரி TN 79 A 1576 Honda Dream என்ற இருசக்கர வாகனத்தில் வந்து முகத்தை கர்ச்சீப்பால் மறைத்து தொப்பி அணிந்து பதுங்கி உள்ளே சென்று சட்டரை இறக்கி வைத்துவிட்டு, சுத்தியல், கட்டிங்பிளேயர், கட்டர், டெஸ்டர் ஆகிய ஆயுதங்களை வைத்து ATM மிஷினை உடைத்து களவு முயற்சி செய்தார்கள் என்பதை அரசு தரப்பு மேற்படி அ.சா.1 முதல் அ.சா.7 ன் சாட்சியத்தின் மூலம் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 457, 380 உ/இ 511–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, எதிரியை இ.த.ச. பிரிவு 457, 380 உ/இ 511–ன் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. மேலும், அ.சா.8, அ.சா.9 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில், இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அரசு வழக்கிற்கு ஆதரமாக வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.5 ன் சாட்சியத்தின் மூலம், இவ்வழக்கின் புகார் மனு சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை குறித்தும், விசாரணை அதிகாரிகள் சம்பவ இடம் சென்று தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் குறித்தும் மட்டுமே தெரிய வருகிறது. இந்நிலையில் இவ்வழக்கில் சம்பவத்தைக் கேள்விப்பட்டு புகார் மனு கொடுத்த சாட்சியான அ.சா.1 ம், சம்பவத்தைக் கேள்விப்பட்ட சாட்சிகளான அ.சா.2, அ.சா.3, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்த சாட்சிகளான அ.சா.4, அ.சா.5 மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான

அ.சா.6, அ.சா.7 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், வழக்கு கோப்புகளை மட்டுமே பார்வையிட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.8, 9–ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதி எதிரி இ.த.ச. பிரிவுகள் 457, 380 உ/இ 511–ன் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14) **<u>எதிரி குற்றவாளிகள் எனில், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?</u>**

14.1 மேற்படி அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 457, 380 உ/இ 511–ன் கீழ் குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிருபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு எந்தவித தண்டனையும் வழங்க இயலாது என இந்நீதிமன்றம் தீர்மாணிக்கிறது.

15. இறுதியாக, எதிரி இ.த.ச. பிரிவுகள் 457, 380 உ/இ 511–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் கீழான குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி ஏற்கனேவே இவ்வழக்கு சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் வழங்கியிருந்த பிணை முறிவு பத்திரத்தை மேல்முறையீடு காலம் முடிந்த பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

16. இவ்வழக்கில் இந்நீதிமன்ற பி.ஆர்.எண். 150/2018–ன் படி தாக்கல் செய்யப்பட்டு, சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 79 A 1576 என்ற பதிவெண் கொண்ட Honda Dream இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் உரிய மனு மூலம் உரிமை ஆவணங்களை தாக்கல் செய்யும்பட்சத்தில் மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் வாகனத்தின் உரிமையாளர் வசம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகின்றது.

17. மேலும், இவ்வழக்கில் இந்நீதிமன்ற பி.ஆர்.எண். 150/2018–ன் படி தாக்கல் செய்யப்பட்டு, சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கருப்பு கலர் சோல்டர் பேக், சா.பொ.3 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய இரும்பு பாகம்

கொண்ட சுத்தியல், சா.பொ.4 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய டேஸ்டர் இரண்டு சிறியது–1, பெரியது –1, சா.பொ.5 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய இரும்பு பாகத்தால் ஆன கட்டிங் பிளேடு –1, சா.பொ.6 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய இரும்பு பாகத்தால் ஆன கட்டர், சா.பொ.7 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள Dark பிரவுன் கலர் தொப்பி ஒன்று, சா.பொ.8 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள சிமெண்ட், பிரவுன் கலர் கலந்த கர்ச்சீப், சா.பொ.9 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள வாடாமல்லி, புளூ கலர் கலந்த சட்டை ஒன்று, சா.பொ.10 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள லைட்பிரவுன் கலர் பேண்ட் ஒன்று ஆகியவற்றை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அழிப்பதற்கு உத்தரவிடப்படுகின்றது.

18. மேலும், இவ்வழக்கில் இந்நீதிமன்ற பி.ஆர்.எண். 151/2018–ன் படி தாக்கல் செய்யப்பட்டு, சா.பொ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள PUMA 16x4.7 G.B. என்று ஆரஞ்சு கலரில் எழுதப்பட்ட வெள்ளைநிற பிளாஸ்டிக் கவரால் மூடப்பட்ட சி.டி.ஒன்றை வழக்குக் கோப்பில் இணைத்து வைக்க உத்தரவிடுகின்றது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூலை செவ்வாய்க்கிழமை, 21–ம் நாளான இன்று என்னால் இந்தத் தீர்ப்புரை அவையறிப்பகரப்பட்டது.

(ஒம்/–எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

1. அ.சா.1 திரு. சுயம்பு ( சம்பவத்தைக் கேள்விப்பட்ட சாட்சி)
2. அ.சா.2 திரு.துரைராஜ் (சம்பவத்தைக் கேள்விப்பட்ட சாட்சி)
3. அ.சா.3 திரு.ஜோன்ஸ் ஜோசப் (சம்பவத்தைக் கேள்விப்பட்ட சாட்சி)
4. அ.சா.4 திரு.சேகர் (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி)
5. அ.சா.5 திரு.கந்தசாமி (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி)
6. அ.சா.6 திரு.குருநாதன் (பார்வை மகஜர் சாட்சி)
7. அ.சா.7 திரு.செல்வக்குமார் (பார்வை மகஜர் சாட்சி)
8. அ.சா.8 திரு. தங்கத்துரை (தலைமைக்காவலர், சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையம்)

9. அ.சா.9 திருமதி. அன்னலெட்சுமி (உதவி ஆய்வாளர், சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையம்)

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 21.10.2017 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 21.10.2017 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 21.10.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 21.10.2017 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ 5 | 21.10.2017 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ 6 | 24.10.2017 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ 7 | 24.10.2017 | அத்தாட்சி |
| அ.சா.ஆ 8 | 24.10.2017 | படிவம்–91 |
| அ.சா.ஆ.9 | 23.10.2017 | படிவம்–91 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :**

| | |
|---|---|
| சா.பொ.1 | TN 79 A 1576 என்ற பதிவெண் கொண்ட Honda Dream இருசக்கர வாகனம் |
| சா.பொ.2 | கருப்பு கலர் சோல்டர் பேக், |
| சா.பொ.3 | மரக்கைப்பிடியுடன் கூடிய இரும்பு பாகம் கொண்ட சுத்தியல் |
| சா.பொ.4 | பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய டேஸ்டர் இரண்டு சிறியது–1, பெரியது –1, |
| சா.பொ.5 | பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய இரும்பு பாகத்தால் ஆன கட்டிங் பிளேடு –1, |
| சா.பொ.6 | பிளாஸ்டிக் கைப்பிடியுன் கூடிய இரும்பு பாகத்தால் ஆன கட்டர் |
| சா.பொ.7 | Dark பிரவுன் கலர் தொப்பி ஒன்று |
| சா.பொ.8 | சிமெண்ட், பிரவுன் கலர் கலந்த கர்ச்சீப், |
| சா.பொ.9 | வாடாமல்லி, புளூ கலர் கலந்த சட்டை ஒன்று, |
| சா.பொ.10 | லைட்பிரவுன் கலர் பேண்ட் ஒன்று |
| சா.பொ.11 | PUMA 16x4.7 G.B. என்று ஆரஞ்சு கலரில் எழுதப்பட்ட வெள்ளைநிற பிளாஸ்டிக் கவரால் மூடப்பட்ட சி.டி.ஒன்று |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை.

(ஒம்/–எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.